# கொழும்புப் பல்கலைக்கழகம்
## சுதேச மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம்

# வெற்றிடங்கள்

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தனிப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. முகாமைத்துவ உதவியாளர் (தரம் III) Management Assistant

**தகைமைகள்:**

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் பாடங்களில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்.
   - சிங்கள மொழி / தமிழ் மொழி
   - ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்
   - கணிதம்

   மற்றும்
2. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் (சாதாரண பொது வினாத்தாள் தவிர) சித்தியடைந்திருத்தல். (இந்த நோக்கத்திற்காக பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியடைந்திருந்தால் போதுமானது)
3. பின்வருவனவற்றில் சித்தியடைந்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

   அ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆறு (06) மாத காலத்திற்குக் குறையாத கணனி பிரயோகத்தில் (Computer applications) ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்.

   மற்றும்

   இ) computer application packages பயன்படுத்துவதில் இரண்டு வருட கால அனுபவம்.

**தகுதிகள்:**

அ. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

ஆ. விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

இ. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு -** 01.01.2025 ஆம் திகதியில் உள்ளவாறு மாதாந்தம் ரூபா 49,475 - 17x540 – 58,655

**தெரிவுசெய்தல் -** பின்வரும் விடயங்களுக்கான எழுத்துமூலப் பரீட்சை, செயல்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம்.

- சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவு
- நுண்ணறிவு (IQ) மற்றும் பொது அறிவு
- கணனி ஆற்றல்

**வயது :** விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

## 02. வேலை உதவியாளர் (தரம் III)

**01 பதவி**

**தகைமைகள்:** க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு:** 01.01.2025 (U PL 1(III) பிரகாரம் மாதாந்தம் ரூபா 42,775- 16x450 – 49,975

**தெரிவு செய்தல்:** ஒரு தொழில் தேர்வு மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் மூலம்.

**வயது :** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**ஏனையவை:**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,

அ. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

ஆ. நாட்டின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் மற்றும் பதவிக்கான கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கான உள மற்றும் உடல் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

இ. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்களை 2026-10-05ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், மருத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவனம், வெளிநோயாளர் பிரிவுக் கட்டிடம், 5ஆம் மாடி, தேசிய ஆயுர்வேத வைத்தியசாலை, கொட்டா வீதி, பொரளை, கொழும்பு 08 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். தயவுசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் விண்ணப்பித்த ஒவ்வொரு பதவிக்கும் மீளளிக்கப்படாத விண்ணப்பச் செயலாக்கக் கட்டணமாக 1,000.00 ரூபா செலுத்த வேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக தகவல்களை மருத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (https://pgim.cmb.ac.lk). பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே கவனத்திற் கொள்ளப்படும்.

முழுமையற்ற விண்ணப்பங்கள் அல்லது தகுதி மற்றும் அனுபவத்தை சரிபார்க்கும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட தேவையான விபரங்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தாமதமான சமர்ப்பிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் மீள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக சேமலாப வைப்பு நிதி (Universities Provident Fund) மற்றும் பல்கலைக்கழக ஓய்வூதியத் திட்டம் (University Pension Scheme) ஆகியவற்றில் உறுப்பினர்களாக இணைக்கப்படுவார்கள். அவர்கள் தங்கள் மாதாந்த சம்பளத்தில் 10% தொகையை பல்கலைக்கழக சேமலாப வைப்பு நிதிக்கு பங்களிப்பாகச் செலுத்த வேண்டும். அதேவேளையில், பணியமர்த்துபவர் (பல்கலைக்கழகம்) ஊழியரின் சம்பளத்தில் 15% தொகைக்கு இணையான தொகையை மொத்தப் பங்களிப்பாகச் செலுத்துவார். இதில் 8% பல்கலைக்கழக ஓய்வூதிய நிதிக்கும், 7% பல்கலைக்கழக சேமலாப வைப்பு நிதிக்கும் வரவு வைக்கப்படும். மேலும், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்ட விதிகளின்படி, சம்பளத்தில் 3% தொகையை பல்கலைக்கழகம் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பாகச் செலுத்தும்.

**விண்ணப்பச் செயலாக்கக் கட்டணம் செலுத்துதல்:** விண்ணப்பதாரர்கள் உரிய கட்டணத்தை பின்வரும் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன், கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டில் தங்கள் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் ‘‘முகாமைத்துவ உதவியாளர் பதவி - தரம் III” அல்லது ‘‘வேலை உதவியாளர் பதவி – தரம் III” ஆகிய விபரங்களை “குறிப்பு” (reference) பகுதியிலோ அல்லது அதற்கான இடத்திலோ குறிப்பிட வேண்டும்.

வங்கி பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட கட்டத்தில் ஒட்ட வேண்டும். அசல் வங்கி பற்றுச்சீட்டின் மூலப் பிரதி இணைக்கப்படாத அல்லது விண்ணப்பதாரரின் விபரங்கள் இல்லாத வங்கிப் பற்றுச்சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதைத் தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும். கட்டணம் செலுத்தியதை உறுதிப்படுத்த, வங்கிச் சீட்டின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி அல்லது தெளிவான புகைப்படத்தை recruitments@pgiimed.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். கணக்கு பெயர்: Postgraduate Institute of Indigenous Medicine / கணக்கு இலக்கம் 92027342 / வங்கி: Bank of Ceylon / கிளை: Borella Super Grade.

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும்/அல்லது பிற நியதிச்சட்ட சபைகளில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலமாகவே சமர்ப்பிக்க வேண்டும். திணைக்களத் தலைவர்கள் அல்லது நிறுவனத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர்,**
**சுதேச பட்டப் பின்படிப்பு நிறுவனம்,**
**கொட்டா வீதி, கொழும்பு - 08.**
**2026-09-13.**